## ஆண்டுதோறும் முற்போக்கு இயக்கப் பங்களிப்புடன் 'அறிவுத் திருவிழா' சிறப்பாக நடைபெறும்:

# அறிவுக்கு முக்கியத்துவம் தருவதால்தான் தி.மு.கழகம் ஒட்டுமொத்த இந்தியாவுக்கும் வழிகாட்டுகிறது!

## 'தி.மு.க. 75 அறிவுத் திருவிழா' நிறைவு விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை!

சென்னை, நவ.18 -

**சென்னை, வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்று வந்த கழக இளைஞர் அணியின் தி.மு.க. 75 அறிவுத் திருவிழா நிறைவு விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் முற்போக்கு புத்தகக் காட்சியில் பங்கேற்ற பதிப்பாளர்களுக்கும், அறிவுத் திருவிழாவின் வெற்றிக்கு தங்கள் உழைப்பைச் செலுத்திய அனைவருக்கும் நினைவுப்பரிசுகள் வழங்கி, நிறைவுரையாற்றினார்.**

**அப்போது அவர், ``அறிவுக்கு முக்கியத்துவம் தருவதால்தான், இன்றைக்கு, திராவிட முன்னேற்றக் கழகம் ஒட்டுமொத்த இந்தியாவுக்கும் வழிகாட்டி இயக்கமாக நடைபோட்டுக் கொண்டு இருக்கிறது. அந்த உரிமையில்தான் நாம் அறிவுத் திருவிழாவை நடத்துகிறோம்" என்று குறிப்பிட்டார்.**

**தி.மு.க. 75 அறிவுத் திருவிழா நிறைவு விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரைவருமாறு:**

தி.மு.க-75 என்ற அறிவுத் திருவிழாவின் நிறைவு நிகழ்ச்சி. 7 நாட்கள் இந்தப் புத்தகக்காட்சி நடைபெற்றது. இரண்டு நாட்கள் அரங்கத்திற்குள் நடந்த நிகழ்ச்சி. கிட்டத்தட்ட 10 அமர்வு, 44 சிறந்த பேச்சாளர்கள், அதன்பிறகு இங்கு ஒரு வாரம் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. எனக்கு தெரிந்து இந்த மாதிரி சிறப்பான நிகழ்ச்சி வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்றது கிடையாது.

### தி.மு.க. இளைஞர் அணி

நம் கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்கள் இந்த அறிவுத் திருவிழாவுக்கு அனுமதி அளித்து, இளைஞர் அணிக்கு வாய்ப்பு கொடுத்து துவக்கி வைத்தார்கள். அவருக்கு முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதன்பிறகு கருத்தரங்கம், காலத்தின் நிறம் கருப்பு-சிவப்பு என்ற புத்தக வெளியீடு என்று இப்படி இந்த விழா நடந்திருந்தாலும், முற்போக்கு புத்தகக்காட்சி இல்லாமல் இந்த அறிவுத் திருவிழா முழுமை அடைந்திருக்காது. அரசியல் புத்தகங்கள் மட்டுமே கொண்ட புத்தகக்காட்சியை இவ்வளவு சிறப்பாக யாராலும் நடத்தி இருக்க முடியாது. தி.மு.க. இளைஞர் அணியால் மட்டுமே இது சாத்தியம். பொதுவாக, புத்தகக்காட்சிக்குச் சென்று பார்பேன், அதில் சமையல் குறிப்புக்கு என்று ஒரு அரங்கு வைத்திருப்பார்கள், ஜோதிட புத்தகங்கள், செல்ப் டெவலப்மென்ட், கோலம் போடுவது எப்படி இப்படிதான் நிறைய புத்தகங்கள் இருக்கும். ஆனால், நம் இளைஞர்அணி நடத்துகிற இந்த புத்தகக்காட்சியில் முழுவதும், அரசியல் புத்தங்களை மக்கள் வாங்கி படிக்கின்ற நிலைமையை நாம் உருவாக்கி இருக்கிறோம்.

இன்னும் பெருமையாகச் சொல்ல வேண்டும் என்றால், கடந்த 9 நாட்களில் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் புத்தகக்காட்சியைப் பார்வையிட்டுள்ளார்கள். 35 லட்சம் ரூபாய்கு மேல் புத்தகங்கள் இங்கு விற்பனையாகி உள்ளது. அதில் இன்னொரு சிறப்பு, அதிகமாக விற்ற புத்தகம் காலத்தின் நிறம் கருப்பு-சிவப்பு. இந்தப் புத்தகம் மட்டும் 1,500 விற்பனையாகியுள்ளது. முன்பதிவு திட்டத்தில் மட்டும் கிட்டத்தட்ட 7 ஆயிரம் பிரதிகள், காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு புத்தகம் விற்பனையாகியுள்ளது. அடுத்த ஆண்டு இதைவிட, அதிகமாக விற்பனையாகும் என்ற நம்பிக்கையும் எனக்கு இருக்கிறது.

கருத்தரங்கத்தில் நான் பேசும்போது சொன்னேன். இந்த அறிவுத் திருவிழாவை நடத்துவதற்கு, வள்ளுவர் கோட்டத்தைத் தேர்ந்தெடுத்தமைக்கு நிறைய காரணங்கள் உண்டு என்று.




கலைஞர் அவர்கள் 1973-ஆல் இந்த வள்ளுவர் கோட்டம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டினார்கள், அப்போது அவர் முதலமைச்சர். அதன்பிறகு ஆட்சி கலைக்கப்பட்டது. 1976-ஆம் ஆண்டு வள்ளுவர் கோட்ட திறப்பு விழாவுக்கு கலைஞருக்கே அழைப்பு கொடுக்கப்படவில்லை. கலைஞரை நிராகரித்துவிட்டு, வள்ளுவர் கோட்டத்தை திறந்தார்கள். அதற்குப் பிறகு நீண்ட இடைவேளைக்கு பிறகு 1989-ஆம் ஆண்டு முதலமைச்சரானார். முதலமைச்சரானவுடன் அவர் பதவி ஏற்பதற்கு தேர்வு செய்யப்பட்ட இடம் இந்த வள்ளுவர் கோட்டம்.

### வள்ளுவர் கோட்டம்

வள்ளுவர் கோட்டம் என்றால், நிறைய பேர் பயந்து, இராசி இல்லாத இடம் என்று சொல்வார்கள். நான் இந்த இடத்தைத் தேர்ந்தெடுத்ததற்கு அதுவும் முக்கியமான காரணம். ஏனென்றால், அறிவுத் திருவிழா நடத்துவதற்கும், இராசிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று நம்புகிறவன் நான். இப்படித்தான் சென்ற சட்டமன்ற தேர்தலின்போது, நிறையபேர் ஜோசியம் எல்லாம் பார்த்தார்கள். கட்டம் சரியில்லை, ஜாதகம் சொல்கிறது. முதலமைச்சராக வாய்ப்பே கிடையாது என்று சொன்னார்கள். ஆனால், தமிழ்நாட்டு மக்கள் ஒருமனதாக நம் தலைவர் அவர்களை முதலமைச்சராகத் தேர்ந்தெடுத்தார்கள். அதற்கு வலுசேர்க்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்த வள்ளுவர் கோட்டத்தில் நிகழ்ச்சியை நடத்துவதற்கு ஒப்புக்கொண்டோம்.

இந்தப் புத்தகக் காட்சியில் 58 கடைகள் அமைக்கப்பட்டு, 46 பதிப்பகங்கள் பங்கு பெற்றன.

அதில் ஒரு சிறப்பு என்னவென்றால், புத்தகக் காட்சியில் நுழையும்போதே முதல் கடையாக இளைஞர் அணியின் 'முத்தமிழ் அறிஞர்' பதிப்பகத்தின் கடை. அனைத்து கடைகளையும் பார்த்துவிட்டு, நீங்கள் வெளியே வர வேண்டும் என்றால், கடைசி கடையாக இருந்தது கலைஞர் கருவூலம் கடை. இதற்கிடையில் இருந்த கடைகளில் திராவிட இயக்க, கம்யூனிச, அம்பேத்கரிய நூல்கள், பெண் விடுதலை பேசுகிற நூல்கள், திராவிட சினிமா நூல்கள் என்று பல முற்போக்கு நூல்கள் இடம்பெற்றிருந்தன.

திருநங்கை பதிப்பகத்துக்கும் கடை ஒதுக்கப்பட்டு அந்தத் தோழர்களின் புத்தகங்களும் பெரியளவில் விற்பனையாகியுள்ளன. அதேபோல, அறிவுத் திருவிழாவில் பேசப்பட்ட உரைகள், கலை நிகழ்ச்சிகள் எல்லாமே சமூக வலைதளத்தில் அனைவராலும் கவனிக்கப்பட்டுள்ளன.

கடந்த 2 நாட்களாக சிவகங்கை மாவட்ட சுற்றுப்பயணத்தில் இருந்தேன். அங்கு பல்வேறு கழக உடன்பிறப்புகள் - திராவிட இயக்கப் பற்றாளர்கள் என்று பலரைச் சந்தித்தேன். இந்த அறிவுத் திருவிழாவை இளைஞர் அணி மிகச் சிறப்பாக நடத்தியுள்ளீர்கள், அதற்கு எங்கள் பாராட்டுகள் என்று சொன்னார்கள். நான்கு வருடங்களுக்கு முன்பாகவே இந்த முயற்சியில் ஈடுபட்டிருக்க வேண்டும் என்று இங்கு பேசியவர்கள் சொன்னார்கள். அந்த உண்மையை நானும் நிச்சயம் உணர்கிறேன்.

### முற்போக்குத் திருவிழா

இனிமேல், நம் தலைவர் சொன்னதைப்போல் வருடந்தோறும் வேறு மாவட்டங்களில் இந்த அறிவுத் திருவிழாவை நிச்சயம் நம் இளைஞர் அணி, இன்னும் சிறப்பாக நடத்துவதற்கான முயற்சியில் ஈடுபடும். இவற்றையெல்லாம் பார்க்கும்போது, இந்த அறிவுத் திருவிழாவை எந்த நோக்கத்துக்காக நடத்தினோமோ அந்த நோக்கம் நிறைவேறி இருக்கிறது என்ற நம்பிக்கையை இங்கு வந்துள்ள வாசகர்கள், இளைஞர் அணி தம்பிமார்கள் எனக்குக் கொடுத்துள்ளீர்கள்.

நாம் சரியான இலக்கை நோக்கி பயணித்துக்கொண்டு இருக்கிறோம் என்ற மனநிறைவை நீங்கள் அனைவரும் எனக்குக் கொடுத்துள்ளீர்கள். ஏன், இந்த முற்போக்குத் திருவிழாவை நடத்தினோம் என்றால், புத்தகங்களின் வழியே தமிழ்நாட்டு இளைஞர்களை, அரசியல்படுத்த வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன்தான் இந்த நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

கழக இளைஞர் அணி தோழர்கள் நிறைய படிக்க வேண்டும், நிறைய கருத்துகளைத் தெரிந்துகொள்ள வேண்டும். நம்மை விமர்சிப்பவர்களின் கருத்துகளையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும். அதற்கு பதில் சொல்வதற்கும் நாம் தயாராக இருக்க வேண்டும். அந்த பதிலைத் தேடி நாம் செல்ல வேண்டும். அதற்கு நாம் படிக்க வேண்டும். விமர்சனங்களுக்கு சரியான பதிலடி கொடுக்கும் போது, நம்மால் அரசியல் களத்தில் உறுதியாக நிற்க முடியும்.

இளைஞர்களின் அறிவைப் பெருக்க வேண்டும், ஆற்றலை வளர்க்க வேண்டும் என்று நாம் இவ்வளவு வேலைகளைச் செய்துகொண்டு இருக்கிறோம். ஆனால், இன்றைக்கு நாட்டில் சில பேரைப் பார்த்தீர்கள் என்றால், அவர்களின் தொண்டர்கள் அறிவாளிகளாக இருப்பதை, அவர்களின் தலைவர்களே விரும்புவதில்லை. தன் தொண்டர்களுக்கு அரசியல் அறிவும் - தெளிவும் வந்துவிட்டால், அவர்களால் இனி அரசியலே நடத்த முடியாது என்று தலைவர்கள் பயப்படுகிறார்கள். உதாரணத்துக்கு அ.தி.மு.க.வை எடுத்துக் கொள்ளுங்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த தொண்டர்களுக்கு பெரியார், அண்ணா கொள்கைகள் தெரியாது, இன்னும் சொல்லப்போனால், அ.தி.மு.க எதற்கு தொடங்கப்பட்டது என்றுகூட தெரியாது. தி.மு.க-வை விமர்சிக்க வேண்டும், கலைஞரை எதிர்க்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் தொடங்கப்பட்ட கட்சிதான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம். இப்போதும் அந்தக் கட்சியின் கொள்கைகள் தெரியக்கூடாது என்று, அந்த கட்சியின் நிரந்தர பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி அவர்கள் அந்தப் பணியின் ஈடுபட்டுள்ளார். ஏனென்றால், அவர்களுக்கும் வரலாறும், கொள்கையும் தெரிந்துவிட்டது என்றால், மக்கள் இன்றைக்கு எடப்பாடியை பார்த்து கேட்கிற கேள்விகளை எல்லாம், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொண்டர்கள் நாளை அவர்களின் தலைவரை பார்த்து கேட்க ஆரம்பித்துவிடுவார்கள்.

### அ.தி.மு.க–வின் நிலைமை.

பா.ஜ.க-வுடன் இனி எந்தக் காலத்திலும் கூட்டணி இல்லை என்று அம்மையார் ஜெயலலிதா சொன்னாங்களே, இப்போது ஏன் கூட்டணி வைத்தீர்கள். ஏன்... நீங்களே, 4 மாதத்துக்கு முன், 2031-இல் கூட பா.ஜ.க-வுடன் கூட்டணி இல்லை என்று சொன்னீர்களே. ஆனால், இப்போது மறுபடியும் நாம் பா.ஜ.க-வுக்கு அடிமையாக ஆகிவிட்டோமே ஏன்" என்று எடப்பாடி பழனிசாமியைப் பார்த்து அ.தி.மு.க. தொண்டர்கள் கேள்வி கேட்பார்கள். அதனால்தான் அ.தி.மு.க தொண்டர்களுக்கு கொள்கை எதுவும் தெரியக்கூடாது என்று எடப்பாடி பழனிசாமி நினைக்கிறார்.

அ.தி.மு.க. தொண்டர்களுக்கு கொள்கை தெரியாமல் இருந்தால்கூட பரவாயில்லை. எடப்பாடி பழனிசாமிக்கே திராவிடம் என்றால் என்னவென்று தெரியாது. அவர் படித்த அந்த ஒரு புத்தகத்தை நானும் தேடுகிறேன், இதுவரை எங்கேயும் கிடைக்கவில்லை. அவர் படித்த ஒரே புத்தகம் சேக்கிழார் எழுதிய ராமாயணம் மட்டும்தான். கொள்கைகளை மட்டும் அவர் மறக்கவில்லை, அவரின் தலைவரையே பல நேரங்களில் மறந்துள்ளார். எம்.ஜி.ஆர் சிலைக்கு மாலை போட்டுட்டு, அண்ணா சிலைக்கு மரியாதை செலுத்திவிட்டு வந்தேன் என்று வெளியே வந்து பேட்டி கொடுக்கிறார். அப்படிப்பட்ட தலைவர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிரந்தர பொதுச் செயலாளர், எதிர்க்கட்சித் தலைவர். இதுதான் இன்றைக்கு அ.தி.மு.க-வின் நிலைமை.

இதுவே, நம் திராவிட முன்னேற்றக் கழகத்தை எடுத்துக் கொள்ளுங்கள். நம்மிடம் 200 இளம் பேச்சாளர்களை நாம் தேர்வு செய்துள்ளோம். அந்த இளம் பேச்சாளர்களை விட்டால்கூட, ஒவ்வொருவரும் கொள்கை பற்றி மணிக் கணக்கில் போட்டி போட்டுக்கொண்டு பேசுவார்கள்.

அ.தி.மு.க. தான் அப்படியென்றால், இன்னும் சில கும்பல்கள் இருக்கின்றன. நாம் அறிவுத் திருவிழாவை நடத்தி, நான்கு நாட்களுக்குப் பின்தான் இப்படியொரு விழா நடக்கிறது என்று அவர்களுக்குத் தெரிந்திருக்கிறது. எப்படி நீங்கள் அறிவுத் திருவிழா நடத்தலாம் என்று கேட்கிறார்கள்.

யாரை கேட்டு, எதற்காக நடத்தினீர்கள் என்று கேட்கிறார்கள். அறிவு இருப்பவன் அறிவுத் திருவிழா நடத்துகிறான். அறிவுத் திருவிழாவில் அவர்களை விமர்சித்துப் பேசிவிட்டோம் என்று கோபம் வேறு. **எப்படி போலீஸை பார்த்தால், திருடர்களுக்குப் பயம் வருமோ, அதேபோல் அறிவு என்ற வார்த்தையை கேட்டாலே அவர்களுக்கு அதிர்ச்சி. சுகாதார மேம்பாட்டைப் பற்றி பேசும்போது, கிருமிகளை பற்றி பேசாமல் இருக்க முடியுமா? கிருமிகளிடம் இருந்து நாம் எப்படி விலகி நிற்க வேண்டும் என்பதைப் பற்றி பேசினால்தான், நாம் சுகாதார மேம்பாட்டைப் பற்றி பேச முடியும். அதைப் போல்தான், அறிவுத் திருவிழாவில் கொள்கைகளைப் பற்றி பேசும்போது, கொள்கையற்ற கும்பலின் ஆபத்தைப் பற்றியும் இங்கே பேசியவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.**

தொடர்ச்சி 5 – ஆம் பக்கம்